# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,156 — 1960 ජූලි 8 වැනි සිකුරාද — 8.7.1960

12,156 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 8 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 165 | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 165 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 166 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### இலங்கை போக்குவரத்துச் சபை

**வெரஹெரையில் மோட்டார் இயந்திரத் தொழில் பயிற்சிப் பாடசாலை**

வெரஹெரை, மோட்டார் இயந்திரத் தொழில் பயிற்சிப்பாடசாலையில் சேர்க்கப்படுவதற்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர் பின்வரும் ஆகக்குறைந்த தகைமைகளுடையவர்களாயிருக்கவேண்டும் :—

(அ) **கல்வி :**

(i) சிங்களத்தில் அல்லது தமிழில் VIII ம் தரத்தில் சித்தி. அத்துடன் ஆங்கிலத்தில் V ம் தரம், அல்லது,

(ii) ஆங்கிலத்தில் VIII ம் தரத்தில் சித்தி. அத்துடன் சிங்களத்தில் அல்லது தமிழில் V ம் தரம்.
(கல்வித்தகைமைகளுக்கு அத்தாட்சியாக விண்ணப்பத்துடன், விண்ணப்பதாரர் இப்போது படித்துவரும் அல்லது கடைசியாக படித்த பாடசாலையின் சான்றிதழை அல்லது அதிபரின் அல்லது தலைமை ஆசிரியரின் சான்றிதழ் ஒன்றை இணைக்கவேண்டும். உலோக அல்லது மர வேலை அறிவு கூடிய தகைமையாயிருக்கும். விண்ணப்பதாரர் இவ்வறிவுடையவர் என்பதுபற்றிய சான்றிதழ்கள், விண்ணப்பத்துடன் அனுப்பிவைக்கவேண்டும்).

(ஆ) **வயது.**—1.1.61 ல், 16 வயதுக்கும் 17 வயதுக்கும் உட்படவேண்டும். (பிறப்பு சான்றிதழும் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும் ; கல்விச்சட்டத்தின் தேவைக்கு விநியோகிக்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(இ) **ஆகக்குறைந்த உயரம்:**—4 அடி 10 அங்குலம்.
**நெஞ்சு சுற்றளவு.**—சாதாரணமாக, 30 அங்குலம்.

3. ஆகக்குறைந்த தேவையான தகைமைகளையுடைய விண்ணப்பதாரர் :

(i) ஒரு எழுத்துப் பரீட்சைக்கும், ((அ) கணக்கு, (ஆ) பொது அறிவு (இலங்கையும் உலகமும்), (இ) உருவ, மாதிரிப் படம் வரைதல், ஆகியன இப்பரீட்சையில் உட்படும்).

(ii) உளச்சார்பு சோதனைக்கும், அழைக்கப்படுவார்கள். இந்தப் பரீட்சை கொழும்பில் அல்லது கொழும்புக்கருகாமையில் நடத்தப்படும்.

4. பரீட்சையின் முடிவில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் பொரலஸ்கமுவ, வெரஹெரையிலுள்ள பயிற்சிப்பாடசாலையில் ஒரு நேர்முகப் பரீட்சைக்கு சமூகம் கொடுக்கும்படி வேண்டப்படுவர்.

5. பரீட்சைக்கு அல்லது இறுதியான நேர்முகப்பரீட்சைக்கு சமூகம் கொடுக்கும் விண்ணப்பதாரரின் பயணச் செலவுகள் முதலியன திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

6. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர் பாடசாலையில் சேர்க்கப்படுவதற்குமுன் அல்லது பாடசாலையில் சேர்ந்து ஒரு மாதத்துக்குள் வைத்தியப் பரிசோதனை செய்யப்பட்டு சபையின் வைத்திய உத்தியோகத்தரால் அவர் தேகத்தகுதியற்றவர் என்று காணப்பட்டால் அவர் தள்ளிவைக்கப்படுவார் அல்லது நிறுத்திவைக்கப்படுவார்.

7. இறுதியாக தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர், பயிற்சிமுடிந்த பின்பு ஆகக் குறைந்தது 5 வருட காலத்துக்கு சபையின் சேவையில் கடமையாற்றுவதென்று ரூ 1,000 க்கு முறியொன்றை, இரண்டு பிணை நிற்போருடன் ஒவ்வொருவரும் ரூ 1,000 க்கு, எழுதவேண்டுமென்று தேவைப்படுவர்.

8. விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9 ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முடிவடையும். இவை கொழும்பு 5, இ.போ.ச. உத்தியோகத்தர்கள் முகாமையாளருக்கு விலாசமிடப்பட வேண்டும்.

உத்தியோகத்தர்கள் முகாமையாளர்,
இலங்கை போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி, நாரகேன்பிற்ற, கொழும்பு 5,
1960 ம் ஆண்டு ஜூன் மீ 29 ந் உ.

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

எனது எண் ஈபீவ 21/59.

### ஆஸ்பத்திரி எழுதுவினைஞர் சேவைப் பரீட்சை, செப்ரெம்பர், 1959

1960 ம் ஆண்டு மார்ச் மாதம் 16 ந் திகதியைக் கொண்டதும் 1960 ம் ஆண்டு மார்ச் மாதம் 15 ந் திகதிய 12,092 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாகவும் 1960 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ந் திகதியைக்கொண்டதும் 1960 ம் ஆண்டு மே மாதம் 6 ந் திகதிய 12,125 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாகவும் 1959 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற ஆஸ்பத்திரி

எழுதுவினைஞர் சேவைப்பரீட்சையின் பெறுபேறுகளைக்கொண்ட பின்வரும் பரீட்சார்த்திகளும் ஆஸ்பத்திரி எழுதுவினைஞர் சேவையின் இரண்டாம் வகுப்புக்கு நியமனம் பெறுதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பதை இத்தால் தெரியப்படுத்தப்படுகிறது :

| பெயர் | விலாசம் |
|---|---|
| அப்பயசிங்க, எல். எஸ். | " மங்கள " நாஒட்டுன்ன, கக்கணதுர |
| அமரகூன், ஏ. டி. டபுள்யு. | கனத்தவத்த, கெய்யந்தொடுவ |
| திசநாயக, யூ. பி. | " விஜயகிரி " யாலேகொட, கந்தேச |
| யோகானந்தவேல், வீ. | விதானை ஒழுங்கை, வல்வெட்டித்துறை |
| கந்தசாமி, எஸ். | 5 ம் வட்டாரம், வேலணை கிழக்கு, வேலணை |
| கருணாரத்தின, எச். எம். | பரணிகொடகெதர, வடுமுனேகெதர |
| லீலதாச, எம். பி. | நிவிசிககாவத்த, கைகாவல, இந்துருவ |
| வியனபத்திரண, யீ. எஸ். ஏ. | 502, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3 |
| நவரத்தின, ஆர். பி. | வேகம, கொக்கறல்ல |
| பீரிஸ், பீ. என். எம். | 335, ஜனப்பிரிய மாவத்த, கொரல்லவெல, மொறட்டுவ |
| பியசேன, யே. பி. | " பியவாச " போறல, வெலிகம |
| ரந்துண்ணே, எம். பீ. | தென்னகும்புற, குருதேனிய, கண்டி |
| ரணசிங்க, எம். பி. | இல. 110, வீதியவத்த, உடுகம்பொல |
| சிவஞானம், எஸ். | வி. செல்லையா மேற்பார்த்து, ஆவரங்கால், புத்தூர் பீ. ஓ. (ஆர். டி. எஸ். ஒழுங்கை) |
| சோமாஸ்கந்தர், ஏ. | " ருவனி " புலோலி மேற்கு, பருத்தித்துறை |

2. தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பரீட்சார்த்திகளுக்கு உடனடியாக நியமனம் கொடுக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்காது. ஆனால் தானங்கள் காலியாக வரும்போது அவர்களுக்கு நியமனங்கள் அளிக்கப்படும். சகல நியமனங்களும் 3 வருடகாலத்துக்குத் தகுதிகாண் நிலையிலிருக்கும். பரீட்சார்த்திகள் ஒரு வைத்தியப்பரீட்சைக்கு உள்ளாவதோடு அவர்கள் ஆஸ்பத்திரி எழுதுவினைஞர் சேவையின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டவராவர்.

சௌக்கியப் பகுதி, த.பெ.எண் 500, கொழும்பு,
1960 ம் ஆடு ஜூன் மீ 24 ந உ.

டபிள்யு. ஏ. கருணாரத்ன,
சௌக்கிய சேவை அதிபதி.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசனத் துறை

கொழும்பு 8, கொட்டா ரோட்டில் உள்ள மேற்குப் பகுதிக்கு பொறுப்பான பொறியியலாளர், 1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 2 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணி வரைக்கும், கொழும்புப் பகுதியில் உள்ள (1) நடுங்கமுவ அணைக்கட்டு வேலைக்கும் (அணைக்கட்டு நீர். 1), (2) நடுங்கமுவ அணைக்கட்டு வேலைக்கும் (அணைக்கட்டு நீர். 2), (3) கொசின்னா அணைக்கட்டு வேலைக்கும், கேகாலைப் பகுதியில் உள்ள, (4) இகெலகொட்டி கும்புற அணைக்கட்டுத் திருத்தவேலைக்கும், முறையே முந்திய மூன்று வேலைகளுக்கும் ரூபா 12,000 க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும், நான்காம் வேலைக்கு ரூபா 6,000 க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இக்காரியாலயத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் காரரிடம் இருந்தும் மற்றும் பலநோக்கு கூட்டுறவு சங்கம், கிராம அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் ஆகியவற்றில் இருந்தும் முத்திரை இட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்வார்.

கம்பகா, அத்தனுகலு ஓயாதிட்ட உப நீர்ப்பாசன அதிகாரியிடம் இருந்து பெறக்கூடிய கேள்விப் பத்திரங்களில் இணைப் பிரதிகள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். இவரிடம் இவ் வேலைகளுக்குரிய படங்களைப் பார்க்கவும், மற்றும் விபரங்களையும் அறிந்துகொள்ள முடியும்.

கேள்விப் பத்திரங்கள் 12.7.60 இல் இருந்து 29.7.60 வரைக்கும் அலுவலக நேரத்தில் தகுதிவாய்ந்தவர்கள் என அத்தாட்சிப்படுத்தும் ஒப்பந்தக்காரர்கள் இந்தக் கந்தோரிலோ அல்லது கச்சேரியிலோ கட்டுப் பணம் கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பித்து விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பிப்போர் தற்பொழுது அரசாங்கத்தில் வேறு வேலைகளுக்கு ஒப்பந்தமுடையவராய் இருப்பின், அவ் வேலைகள் திருப்திகரமாக நடைபெறுகின்றனவென பொறுப்பான அதிகாரிகளிடம் இருந்து பெற்ற அத்தாட்சிப் பத்திரங்களையும், கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்.

எவ்வித கேள்வியும் இன்றி, கேள்விப் பத்திரங்களை முற்றாகவோ, அல்லது ஒரு பகுதியையோ, நிராகரிப்பதற்கும் அல்லது ஏற்றுக் கொள்வதற்கும் அரசாங்கத்துக்கு உரிமை உண்டு.

ரி. எல். எம். பாலதாசா,
உட்பிரிவு நீர்ப்பாசன அதிகாரி.

நீர்ப்பாசன காரியாலயம், கம்பகா,
24.6.60.

---

## நீர்ப்பாசன இலாகா

மத்திய பகுதி பெரும்பாக பொறியியலாளரால் கீழ்க்காணும் வேலைகளுக்கு 1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 3 ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிவரையும் நீர்ப்பாசன இலாகாவில் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வேலைகளுக்கு எதிரேயுள்ள தொகைக்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவுசெய்த ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | வேலையின் பெயர் | ஒப்பந்தக்காரர்களின் பதிவுத் தொகை ரூபா | கேள்விப்பத்திரத்திற் குரிய கட்டுப்பணம் ரூபா |
|---|---|---|---|
| 1. | கனிஷ்ட உத்தியோகத்தரின் 5 ம் இலக்க வீடு கட்டுதல், நுவரேலியா | 20,000 | 25 |
| 2. | கனிஷ்ட உத்தியோகத்தரின் 6 ம் இலக்க வீடுகட்டுதல், நுவரேலியா | 20,000 | 25 |
| 3. | கனிஷ்ட உத்தியோகத்தரின் 7 ம் இலக்க வீடுகட்டுதல், நுவரேலியா | 20,000 | 25 |

இதற்குரிய கேள்விப்பத்திரங்கள் 11-7-60 தொடக்கம் 1-8-60 வரையும் கண்டி, நீர்ப்பாசன பொறியியலாளரால், காரியாலய நேரங்களில், ஏற்றுக்கொள்ளப்படும்.

யு. டி. வீரசிங்க,
கண்டி நீர்ப்பாசன பொறியியலாளர்.

---

## நீர்ப்பாசன இலாகா திருகோணமலை உப பகுதி

(அ) திருகோணமலை மாவட்ட பெரும்பாக நீர்ப்பாசன இன்சினியர் இவ்விலாகாவில் 15,000 ரூபாவுக்கும் 12,000 ரூபாவுக்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்களிடமிருந்து:

(1) திருகோணமலை உள்துறைமுகத் தெருவுக்கருகாமையில் வேலையாட்களின் நிரந்தர, மாதிரி இரட்டை வீடும்;

(2) ஆண்டான் குளத்துக் கருகாமையில் தொழிலாளிகள் நிரந்தர மாதிரி இரட்டை வீடும் கட்டுவதற்கு தனித்தனியே சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை 1960 ஆண்டு யூலை மாதம் 27 ம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணி வரையும் ஏற்றுக்கொள்வார்.

(ஆ) கேள்விப்பத்திரங்கள் கீழ் கையொப்பமிட்டிருப்பவரிடமிருந்து 23.7.1960 வரையும் பெற்றுக் கொள்ளலாம். கையொப்பமிடப்பட்ட வேள்விப் பத்திரங்கள் இரணையாக திருகோணமலை பெரும்பாக நீர்ப்பாசன இன்சினியர், உவர் மலை, திருகோணமலை என்ற விலாசத்திற்கு 27.7.1960 காலை 9.30 மணிக்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். என்வலப்பில் இடது மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல்வேண்டும்.

(இ) எந்த மாகாண அதிபர் கந்தோரிலாவது 25 ரூபா கட்டிய பற்றுச் சீட்டும், மேலே கூறப்பட்ட தகுதிகளும் உடையவர்களுக்கு மாத்திரம் கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படும்.

(ஈ) தனித்தனியே சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களுக்கு மனுச்செய்யும்போது, தற்சமயம் அரசாங்கத்தில் கொந்தராத்து

வேலைகள் செய்பவர்கள் அப்பகுதி உத்தியோகஸ்தரிடமிருந்து பெற்றுக் கொண்ட நல்வேலைப்பத்திரமொன்றும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(உ) கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்விப்பத்திரங்கள் அனுப்பிய்வர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

(ஊ) இன்னும் தேவையான விபரங்களுக்கும் படங்கள் முதலிய வற்றின் விபரங்களுக்கும் கீழ்கையொப்பமிட்டிருப்பவருடைய கந் தோருக்கு வந்து பெற்றுக்கொள்ளலாம்.

K. சிவசுப்பிரமணியம்,
உப நீர்ப்பாசனக் கந்தோர் அதிபர்,
திருகோணமலை உப-பகுதி.

உள்துறைமுகத்தெரு, திருகோணமலை,
1960 ம் ஞூ ஜூலை மீ 1 ந வ.

---

## நீர்ப்பாசன இலாகா

வடமேல் மாகாண பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்களால் ஆடி மாதம் 27 ம் திகதி (27.7.60) காலை 9.30 மணிவரையும் கீழ்க் காணும் வேலைக்கு கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

வடமேல் மாகாண குருணுகல் மாவட்டத்திலுள்ள கக்வட்டுன ஓயா என்னும் இடத்தில் தொழில் நுட்ப உதவியாளர்களுக்கு " மூன்று தற்காலிக-நிரந்தர வீடு அமைத்தல் ".

கேள்விப்பத்திரம் கக்வட்டுன ஓயா நீர்ப்பாசன பொறியியலாளர் இடம் இருந்து கேள்வித்தாள்களைப்பெற்று இருதாள்களில் மனுச்செய்தல் வேண்டும். வேலையின் பெயர் இடது பக்க உறையில் தெளிவாக எழுதப்படவேண்டும். கேள்விப்பத்திரம் பெரும்பாக நீர்ப்பாசன பொ றியியலாளர் அலுவலகத்திற்கு பதிவு செய்தோ அல்லது நேரில் எடுத்தோ அனுப்பவேண்டும்.

வேண்டிய விபரங்களை கக்வட்டுன ஓயா நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தில் பார்க்கலாம்.

நீர்ப்பாசன இலாக்காவில் ரூபா 12,000 அல்லது மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்டனர் என்று அத்தாட்சி பண்ணும் ஒப்பந்தக்காரருக்கு மட்டும் நீர்ப்பாசன பொறியியலாளர் ஆடி மாதம் 26 ம் திகதி (26.7.60) நண்பகல் 12.00 மணிவரையும் கேள்வித் தாள்கள் வழங்குவார். இவர்கள் நீர்ப்பாசன அதிபர் சார்பில் ரூபா 25 இந்த வேலைக்கு முற் பணமாக கச்சேரியில் கட்டி பற்றுச் சீட்டை கேள்வித்தாள்களுக்கு மனுச்செய்யும் பொழுது காட்டவேண்டும்.

நீர்ப்பாசன பொறியியலாளர்,
கக்வட்டுன ஓயாதிட்டம்.

மக்குள் பொத்த, இப்பகமுவ.

---

## நீர்ப்பாசன இலாகா

வடமேல் மாகாண பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்களால் ஆடி மாதம் 27 ம் திகதி (27.7.60) காலை 9.30 மணிவரையும் கீழ்க்காணும் வேலைக்கு வேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

" வடமேல் மாகாண குருணுக்கல் மாவட்டத்தில் கக்வட்டுன ஓயா திட்ட இடதுபக்க பிரதான வாய்க்கால்மேல் அதி உறுதியான பாலம் கட்டல் ".

கேள்விப்பத்திரம் கக்வட்டுன ஓயா நீர்ப்பாசன பொறியியலாளர் இடம் இருந்து கேள்வித்தாள்களைப்பெற்று இருதாள்களில் மனுசசெய்தல் வேண்டும். வேலையின் பெயர் இடது பக்க உறையில் தெளிவாக எழுதப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்திற்கு பதிவு செய்தோ அல்லது நேரில் எடுத்தோ அனுப்பவேண்டும். வேண்டிய விபரங்களை கக்வட்டுன ஓயா நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தில் பார்க்கலாம்.

நீர்ப்பாசன இலாக்காவில் ரூபா 6,000 அல்லது மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்டனர் என்று அத்தாட்சி பண்ணும் ஒப்பந்தக் காரர்களுக்கு மட்டும் நீர்ப்பாசன பொறியியலாளர் ஆடி மாதம் 26 ம் திகதி (26.7.60) நண்பகல் 12.00 மணி வரையும் கேள்வித்தாள்கள் வழங்குவார். இவர்கள் நீர்ப்பாசன அதிபர் சார்பில் ரூபா 25 இந்த வேலைக்கு முற்பணமாக கச்சேரியில் கட்டி பற்றுச்சீட்டை கேள்வித்தாள் களுக்கு மனுச்செய்யும் பொழுது காட்டவேண்டும்.

நீர்ப்பாசன பொறியியலாளர்,
கக்வட்டுன ஓயா திட்டம்.

மக்குள் பொத்த, இப்பகமுவ.

---

## 1960/61—காலி மாவட்டத்தில் உணவுப்பொருட்களும், " கெயர் " பால் மாவும் ஏற்றிச் செல்வதற்கான கோரிக்கைப் பத்திரங்கள்

1960 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ந திகதி தொடக்கம், 1961 ம் ஆண்டு செப்றெம்பர் மாதம் 30 ந திகதி வரையுள்ள காலத்தில் எல்பிற்றிய விநியோக நிலையத்திலும், காலி விநியோக நிலையத்திலும் உணவுப்பொருட்கள் முதலியவை ஏற்றிச் செல்வதற்கும், கையாளு தற்குமான கோரிக்கைகள், உணவு, வர்த்தக, வியாபார அமைச்சின் கோரிக்கைச் சபைத் தலைவரால், கொழும்பு 2, யூனியன் பிளேஸ், 330 ம் இலக்கத்தில் 1960 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 5 ந திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். " கெயர் " பால் மா பூஸா விநியோக நிலையத்திலிருந்து, கீழ்க்காணும் பாடசாலைகளுக்கு எடுத்துச் செல்வதற்கான கோரிக்கைகள், காலி பிரதி உணவுக் கட்டுப்பாட்டதி காரியால் 1960 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 5 ந திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பகுதிகள் :—

காலி, அம்பலாங்கொடை, எல்பிற்றிய, இந்துருவ, ஹிக்கடுவ, டொடன்டுவ, பத்தேகம, அஹங்கம.

காலி மாவட்டப் பிரதி உணவுக்கட்டுப்பாட்டதிகாரியிடமிருந்து பெறக்கூடிய கோரிக்கைப் பத்திரங்களில் (இரு பிரதிகளில்) கோரிக்கைகள் செய்யப் படவேண்டும். ஒவ்வொரு விநியோக நிலையத்துக்கும் ரூ. 250 (காலி, எல்பிற்றிய) கெயர் பாலுக்காக, (அதாவது ஒவ்வொரு பகுதிக்கும்) ரூ. 50 ம் தங்குபணமாக காலிக் கச்சேரியில் செலுத்தப்பட்டு பற்றுச்சீட் டுக்காண்பிப்பதன் பேரில் கோரிக்கைப் பத்திரங்கள் வழங்கப்படும்.

1960 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 4 ந திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரை கோரிக்கைப் பத்திரங்கள் வழங்கப்படும்.

ஏனைய விபரங்கள் காலி மாவட்ட பிரதி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி யிடமிருந்து அறிந்துகொள்ளலாம்.

எம். எஸ். வி. குணவர்தன,
காலி மாவட்ட பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்காக.

காலிக் கச்சேரி,
1960 ம் ஞூ ஜூன் மீ 16 ந வ.

---

## பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி, நுவரெலியா டிஸ்திறிக், 1960–1961 வருஷத்திற்கு உணவு பண்டகசாலைகளுக்கு சேவை செய்ய ரெண்டர்கள்

1960 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ந திகதி முதல் செப்டெம்பர் மாதம் 30 ந திகதிவரை நுவரேலியா டிஸ்திறிக், நுவரேலியா, வட்ட கொடை, தலவாகொலை, உணவுப் பண்டகசாலைகளுக்கு, உணவு பொருட் களும் கெயர் மாவுத்தூளும் ஏற்றிச்செல்ல ரெண்டர்கள், 1960 ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 8 ந திகதி பிற்பகல் 2.30 மணிக்குள், உணவு, வர்த்தக, வியாபார அமைச்சு ரெண்டர் சபைத்தலைவருக்கு, இலக்கம் 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 2, தபால் பெட்டி இலக்கம் 569, என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும். நுவரேலியா டிஸ்திறிக், ராகலை, கொட்டகலை, உணவு பண்டகசாலைகளுக்கு 1960 ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 8 ந திகதி பிற்பகல் 2.30 மணிக்குமுன் நுவரேலியா பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்கு, நுவரேலியா கச்சேரி என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

2. நுவரேலியா பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்கு விண்ணப்பம் செய்து பெற்றுக்கொண்ட பாரத்திலேயே எல்லா ரெண்டர்களையும் இரட் டையாகச் சமர்ப்பிக்கவேண்டும். உணவு, வர்த்தக, வியாபார அமைச்சு ரெண்டர் தலைவருக்கு சமர்ப்பிக்கும் ரெண்டர்கள் ஒவ்வொன்றுக்கும் கட்டுப்பணம் ரூபா 250/– வீதமும், நுவரேலியா பிரதி உணவுக் கட் டுப்பாட்டதிகாரிக்கு சமர்ப்பிக்கும் ரெண்டர்களுக்கு ரூபா 50 வீதம் கட்டுப் பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட ரசீதைச் சமர்ப்பித்தே, 1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 6 ந திகதி பிற்பகல் 12 மணிக்குமுன் ரெண்டர் பாரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

3. முழு விபரங்கள் வேலை நாட்களில் சாதாரண வேலை நேரங்களில் நுவரேலியா பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் கந்தோரில் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். ஜே. விஜேசேகர,
பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்காக.

நுவரேலியாக் கச்சேரி,
1960 ம் ஆண்டு ஜூன் மீ 29 ந வ.

---

## கேள்விப் பத்திர அறிவித்தல்

3.8.60 ந திகதி நண்பகல் 12 மணிவரை கீழ்க்காட்டப்படும் வேலை களுக்கு, மன்னார் மாவட்ட உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :—

### மன்னாரிலும் முருங்கனிலுமுள்ள உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டகசாலைகள், 1960/1961

**அரிசி, மா, நெல் முதலியவற்றைக் கொணர்தலும் கையாளுதலும் :—**

(1) அரிசி, மா, நெல் மூடைகள் முதலியவற்றைத் தொடர்வண்டிப் பெட்டிகளிலிருந்து இறக்கி, மன்னார்/முருங்கன் தொடர்வண்டி நிலையத்திலிருந்து மன்னார்/முருங்கன் உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டகசாலைக்குக் கொண்டுசென்று அடுக்குதலும் மறுவித சேவையும் ;

(2) அரிசி, மா, நெல் மூடைகள் முதலியவற்றைத் தொடர்வண்டிப் பெட்டிகளிலிருந்து இறக்கி, நிறுத்து, மன்னார்/முருங்கன் தொடர்வண்டி நிலயத்திலிருந்து மன்னார்/முருங்கன் உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டகசாலைக்குக் கொண்டுசென்று அடுக்குதலும் மறுவித சேவையும் ;

(3) அரிசி, மா, நெல் மூடைகள் முதலியவற்றை மன்னார்/முருங்கன் உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டகசாலையில் லொறிகளில் அல்லது மாட்டுவண்டிகளிலிருந்து இறக்கி, திருப்பி அளந்து, திருப்பிச் சாக்கிலிட்டு, தைத்து, நிறுத்து அடுக்குதல் ;

(4) அரிசி, மா, நெல் மூடைகள் முதலியவற்றை அட்டிபெயர்த்து, நிறுத்தலளவை இயந்திரத்திற்குக் கொண்டுசென்று நிறுத்தல்;

(5) அரிசி, மா, நெல் மூடைகள் முதலியவற்றை மன்னார்/முருங்கன் உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டகசாலையில் லொறிகளில் அல்லது மாட்டுவண்டிகளிலிருந்து இறக்கி, நிறுத்து அடுக்குதல் ;

(6) (அ) அட்டிபெயர்த்து, நிறுத்தலளவை இயந்திரத்திற்குக் கொண்டு சென்று நிறுத்தல்;

(ஆ) அட்டிபெயர்த்து நிறுத்தலளவை இயந்திரத்திற்குக் கொண்டு சென்று பக்கத்தில் அடுக்குதல் ;

(இ) அட்டிபெயர்த்து நிறுத்தலளவை இயந்திரத்திற்குக் கொண்டு சென்று, நிறுத்து லொறி அல்லது வண்டிக்குக் கொண்டு சென்று ஏற்றி அடுக்குதல் ;

(ஈ) அட்டியில் அல்லது நிறுத்தலளவை இயந்திரத்திலிருந்து எடுத்து லொறி அல்லது வண்டிக்குக் கொண்டுசென்று ஏற்றி அடுக்குதல் ;

(7) அரிசி, மா, நெல் மூடைகள் முதலியவற்றை அட்டிபெயர்த்து அவிழ்த்து திருப்பிச் சாக்கிலிட்டு, நிறுத்துத் தைத்தல் ;

(8) அரிசி, மா, நெல் மூடைகள் முதலியவற்றை பண்டகசாலையின் ஒரு பகுதியிலிருந்து மறு பகுதியில் திருப்பி அடுக்குதல் ;

(9) அரிசி, மா, நெல் மூடைகள் முதலியவற்றை ஒரு இடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்கு எடுத்துச் செல்லுதல் ;

(10) வெற்றுச் சாக்குகளைத் தொடர் வண்டியில் அல்லது பிற வாகனத்திலிருந்து இறக்கி, பண்டகசாலைக்குக் கொண்டுசென்று அடுக்குதல் ; ஒவ்வொன்றும் 50 சாக்குகள் கொண்ட கட்டு ;

(11) சாக்குகளை வகைப்படுத்தி, எண்ணி, கட்டிப் பண்டகசாலையில் அடுக்குதல் ; ஒவ்வொன்றும் 50 சாக்குகள் கொண்ட கட்டு ;

(12) நாளுவித சேவைகளுக்குக் கூலியாட்களைக் கொடுத்தல் :—ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு கூலியாளுக்கு எவ்வளவென்பது : மேலேயுள்ள (1), (2), (3), (4), (5), (6அ), (6ஆ), (6இ), (6ஈ), (7), (8), (9) ம் பத்திகளில் குறிப்பிட்ட சேவைகளுக்காகக் கூலிவிபரம் மூடைகளின் நிறையை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிடப்படல் வேண்டும். இதற்காக மூடைகள் கீழ்வரும் முறைப்படி வகுக்கப்படுகின்றன :—

45 இருத்தல் தொடக்கம் 90 இருத்தல் வரை நிறையுள்ள மூடைகள்

| | | | |
|---|---|---|---|
| 91 | ,, | 130 | ,, |
| 131 | ,, | 180 | ,, |
| 181 | ,, | 230 | ,, |
| 231 | ,, | 260 | ,, |

**பால் மா உணவினைக் கொண்டு செல்தல் கையாளுதல் பாடசாலைகளுக்கு விநியோகித்தல்**

(அ) மன்னார் தொடர்வண்டி நிலயத்திலிருந்து மன்னார் (கோட்டை) உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டகசாலைக்குக் கெயர் பால் மா கொண்டுசெல்தல் ;

(ஆ) முருங்கன் தொடர்வண்டி நிலயத்திலிருந்து முருங்கன் உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டகசாலைக்குக் கெயர் பால் மா கொண்டு செல்தல் ;

(இ) மன்னார் உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டகசாலையிலிருந்து அப் பண்டகசாலையால் விநியோகிக்கப்படும் பாடசாலைகளுக்குக் கெயர் பால்மா கொண்டு செல்தல் ;

(ஈ) முருங்கன் உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டகசாலையிலிருந்து அப் பண்டகசாலையால் விநியோகிக்கப்படும் பாடசாலைகளுக்குக் கெயர் பால்மா கொண்டு செல்தல் ;

கேள்விப் பத்திர விண்ணப்பக்காரர்கள் ஒரு அந்தருக்கு இவ்வளவு தொகையெனக் காட்டல் வேண்டும். கெயர் மாவினை ஏற்றுதல், இறக்குதல், கையாளுதல், கொண்டுசெல்தல் யாவும் இதனுள் அடங்கும்.

2. கேள்விப் பத்திரங்கள் இரட்டைப் பிரதியில் அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு பண்டகசாலைக்கும், கச்சேரியில் ரூபா 50. கட்டிய தாகக் கிடைக்கும் பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்து, 2.8.60 ந் திகதி பிற்பகல் 4 மணிவரை கேள்விப் பத்திரங்களை மன்னார் கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் விபரங்களைக் கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து விண்ணப்பமூலம் பெற்றுக்கொள்ளலாம்.

டீ. ஜே. எவ். டி. லியனகே,
உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரி.

கச்சேரி, மன்னார்,
1960 ம் ஞு ஜூன் மீ 23 ந் உ.

**1960/1961—பொலனறுவை மாவட்டத்தில் உணவுப் பொருட்களும் "கெயர்" பால் மாவும் ஏற்றிச்செல்லவும் பாரங் கொடுக்கவும் கேள்விப்பத்திரங்கள்**

பொலன்நறுவை மாவட்டத்திலுள்ள (அ) பொலன்நறுவை விநியோக ஸ்தானத்திலும் (ஆ) ஹிங்குறக்கொட விநியோக ஸ்தானத்திலும் நிதிவருடம் 1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1961 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதி வரைக்கும் உணவுப் பொருட்களும் "கெயர்" பால் மாவும் ஏற்றிச்செல்லவும் பாரங் கொடுக்கவும் உரிய கேள்விப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஆடி மாதம் 29 ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிவரைக்கும் பொலன்னறுவை உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி ஏற்றுக்கொள்ளுவார்.

2. கச்சேரி, பொலன்னறுவையிலுள்ள உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் கந்தோரில் கிடைக்கப்பெறும் மாதிரிப் பத்திரங்களில் கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் தாக்கல் செய்யப்படவேண்டும். கேள்விப் பத்திரங்களின் மாதிரிப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஆடி மாதம் 28 ந் திகதி, வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி வரைக்கும் விநியோகிக்கப்படும். அவை கேள்விப்பத்திரங்களுக்குரிய கட்டுப் பணம் ரூபா 50 (ஐம்பது ரூபா) பொலன்னறுவை கச்சேரியில் கட்டப்பெற்று அதற்குரிய ரசீது காண்பிக்கப்பட்டதின் பின்புதான் விநியோகிக்கப்படும்.

3. மேற்கொண்ட விபரங்கள் யாவும் பொலன்னறுவை உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியிடமிருந்து தெரிந்துகொள்ளலாம்.

சி. அபேசிர,
உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிக்காக.

பொலனறுவைக் கச்சேரி,
1960 ம் ஞு ஆனி மீ 24 ந் உ.

---

**திருகோணமலையில் உணவுப் பதார்த்தங்களை ஏற்றி இறக்கிக் கொடுத்தல்—1960/1961**

திருகோணமலைப் பகுதியில் உணவுப் பொருட்களை ஏற்றி இறக்கிக் கொடுப்பதற்கு கேள்விப் பத்திரம், உணவு, வர்த்தக, வியாபார அமைச்சின் கோரிக்கைச் சபைத் தலைவரால் தபாற் பெட்டி இல. 569, யூனியன் பிளேஸ், கொழும்பு 2, என்னும் விலாசத்தில் 1960 ம் ஆண்டு ஆடி மாதம் 29 ந் திகதி வெள்ளிக் கிழமை பி.ப. 2½ மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

1960 ம் ஆண்டு ஆடி மாதம் 29 ந் திகதி நண்பகல் 12 மணிவரைக்கும் திருகோணமலைப் பகுதி பிரதி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் காரியாலயத்தில் பெறக்கூடிய பத்திரங்களில் விண்ணப்பிக்கவேண்டும். பிரதி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியிடம் தங்கு பணமாக ரூபா 250 கொடுத்துப் பெறும் பற்றுச் சீட்டை காண்பிப்பதின் பேரில் கோரிக்கைப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். இதன் விபரங்கள் திருகோணமலைப் பகுதி பிரதி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி காரியாலயத்தில் பெறலாம்.

எம். ஏ. சி. டேவிட்,
பிரதி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி, திருகோணமலை.

உணவுக் கட்டுப்பாட்டு காரியாலயம்,
திருகோணமலை,
1960 ம் ஞு ஜூலை மீ 2 ந் உ.

---

**கேள்விப் பத்திரம்**

கீழ்க்காணும் வாடிவீடுகளுக்கு பராமரிப்புத் திருத்தங்கள் செய்யக் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :—

1. ஹன்வல வாடிவீடு
2. மஹற ,,
3. கடுவல ,,
4. கெஸ்பாவ ,,
5. ஹோமகம ,,
6. வக ,,
7. பாதுக்க ,,

2. கேள்விப்பத்திரம் ஒவ்வொன்றிற்கும் ரூபா 10/- கட்டுப்பணம் செலுத்திக் கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபரிடம் பெற வேண்டும். கேள்விப்பத்திரம் ஒப்புக்கொண்டபின் அரசாங்க அதிபரால் குறிப்பிட்ட காலத்திற்குள் பிணைப்பணம் கட்டி ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும். போதிய காரணங்களின்றிக் காலதாமதமேற்படின் கட்டுப் பணம் பறிமுதல் செய்யப்படும்.

3. ஒவ்வொரு வேலைகளுக்கும் வெவ்வேறு கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அப்பத்திரங்கள் கொழும்புக் கச்சேரியில் 25 சதம் செலுத்திப் பெற்றுகொள்ளல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 13.7.1960 நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும்.

4. விண்ணபித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட அட்டவணையில் காணும் விகிதத்திற் கிணங்கக் கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபரும் கொந்த ராத்துக்காரரும் இணங்கிய ஒப்பந்தத்தின்படி வேலை ஆரம்பிக்க வேண்டும். ஒப்பந்தத்திற்குரிய 50 சத முத்திரை கொந்தராத்துக்காரரால் கொடுக்கப்பட வேண்டும்.

5. நுட்பங்கள், பொருள் அட்டவணை, ஒப்பந்த நிபந்தனைகள் ஆகிய சகல விபரங்களும் கொழும்புக் கச்சேரியில் காலை 10 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை சனிக்கிழமைகளினும் காலை 10 மணி முதல் மாலை 3 மணிவரை மற்றைய வேலை நாட்களினும், 13.7.60 ல் நண்பகல் 12 மணி வரையும் பார்வையிடவும் பெற்றுக் கொள்ளவும் முடியும். விண்ணப்பப்பத்திரங்களில் தொகை குறிப் பிடாமலிருந்தால் கவனத்திற்கு எடுக்கப்படமாட்டா.

6. விண்ணப்பப் பத்திரங்கள் 27.7.60 முற்பகல் 11 மணிக்குப் பிந்தாமல் கொழும்புக் கச்சேரியிலிருக்கும் "ரெண்டர்" பெட்டியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர் விண்ணப்பம் ஏற்றுக்கொள் ளப்பட்ட 7 நாட்களுக்கிடையில் "ரெண்டரில்" கூறிய முழுத் தொகையின் 1/10 பாகத்தை பிணைப்பணமாகச் செலுத்தல் வேண்டும்.

8. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர் கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபருக்கு அல்லது அவரால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு முழு வேலைகளையும் "ரெண்டர்" ஏற்றுக் கொள்ளும்பொழுது குறிப்பிடும் நாளுக்கு முன்னதாக முடித்துக் கொடுத்தல் வேண்டும்.

9. கொந்தராத்தில்க் குறிக்கப்பட்டு ஆனல் செய்யபடா வேலைகளுக்குப் பணம் கொடுக்கப்படமாட்டா. கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஆகக் குறைந்த விண்ணப்பத்தையோ அல்லது வேறு எந்த விண்ணப் பத்தையோ ஏற்றுக்கொள்ளல் வேண்டும் என்ற நிபந்தனைக்குக் கட்டுப்பட்டவரல்ல.

| | |
|---|---|
| | சீ. லுடூவின்ஸ், |
| கொழும்புக் கச்சேரி, | அரசாங்க அதிபருக்காக, |
| 1960 ம் ஆண்டு ஜூன் மீ 27 ந் வ. | கொழும்பு மாவட்டம். |

---

**கட்டுநாயகா ஆகாயவிமானப் படைத்தளத்தில் உள்ள தேங்காய் விற்பனவு**

கட்டுநாயகா ஆகாயவிமானப் படைத் தளகாணியில் பிடுங்கப்பட்ட சுமார் 150,000 தேங்காய்கள் விற்பனைக்கு வேண்டிய கேள்விப்பத்திரங்கள் கொழும்புக் கச்சேரி அரசாங்க அதிபரால் 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 15 ந் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணி வரை கொழும்புக் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வி அனுப்புபவர் பிடுங்கிய முழுக் காய்களையும் வாங்க வேண்டும். கேள்விப்பத்திரத்தில் 1000 காய்களுக்கென்ன வீதமென்பது காட்டப் பட வேண்டும்.

2. கொழும்புக் கச்சேரியில் பெற்றுக் கொள்ளும் மாதிரிப் பத்திரங் களில் தான் கேள்விகள் அனுப்ப வேண்டும். ஒப்பந்தக் கேள்விகள் இரு பிரதிகளில் மெழுகச்சிட்டு கேள்விக்காரரின் கையெழுத்திடப்பட்டு அரசாங்க அதிபர் கொழும்புக் கச்சேரி என மேல்விலாசம் இடப்படல் வேண்டும். ஒப்பந்தக் கேள்வி கொண்ட உறைகளில் அவற்றின் இடது பக்கத்தில் கட்டுநாயகா ஆகாயவிமானப் படைத் தளத்தில் உள்ள தேங்காய் வாங்குவது பற்றிய ஒப்பந்தக் கேள்வி என எழுதி அனுப்பப் படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள் கடைசித் தேதி காலை 10.00 மணி வரைக்கும் ரூபா 100.00 கட்டப்பட்ட பற்றுச் சீட்டைக் காட்டியபின்தான் வழங்கப்படும். கட்டுப்பணம் கொழும்புக் கச்சேரியில் கட்டப்படல் வேண டும். எவருடைய கேள்விப் பத்திரம் ஏற்கப்பட்டதோ அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென அறிவிக்கும் கடிதம் கிடைத்து பத்து (10) நாட்களுக்குள் முழுத் தொகையையும் கட்டித் தேங்காய்களை எடுத்துச் செல்ல வேண்டும். அப்படிச் செய்யத் தவறின் அவருடைய கட்டுப் பணம் பறிமுதல் செய்யப்பட்டு அவரது பெயரைத் தவறான கேள்விக்காரர் என்னும் இடாப்பில் சேர்க்கவேண்டிவரும். அரசாங்கம் அவரிடம் வைத்துள்ள வேறு எந்தத் தொடர்புக்காவது இரக்கம் காட்ட முடியாது.

4. பதிவு செய்த தபாலில் அரசாங்க அதிபர், கொழும்பு எனும் விலாசத்திற்கு கேள்விப்பத்திரம் அனுப்பல் வேண்டும், அல்லது இதற் கெனக் கொழும்புக் கச்சேரியில் வைக்கப்ப பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விக்காரர் பெயரும் விலா ம் உறையில் குறிக்கப் படல் வேண்டும்.

5. விரும்பினுல் கேள்விப்பத்திரம் உடைக்கப்படும் நேரத்தில் பிர சன்னமாயிருக்க அனுமதிக்கப்படும். கொழும்புக் கச்சேரியில் கேள்விப் பத்திரம் யாவும் 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 15 ந் திகதி பகல் 12.00 மணிக்குத் திறக்கப்படும்.

6. அதற்கெனக் கொடுக்கப்படும் பாரத்தின்படி இல்லாத அதன்படி சொல்லப்பட்ட நிபந்தனைக் கடங்காத கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. கட்டுப்பணம் கட்டிய றிசீற் துண்டு இல்லாத கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படாது. மையினுலேயே தெளிவாக கேள்வியின் விகிதம் தொகை முதலியவற்றை எழுத வேண்டும். திருத்தம் ஏதாகினும் உண்டாயின் அவற்றைக் கேள்விக்காரரின் சுருக்குக் கையெழுத்திட்டு உறுதி பண்ணல் வேண்டும்.

7. கேள்விக்காரர் தங்கள் முழு விலாசத்தையும் மாதிரிப் பத்திரத்தில் கொட்டை எழுத்துக்களில் எழுத வேண்டும்.

8. கேள்விக்காரர் ரெண்டர்ப் பத்திரம் யாவும் மூடப்படும் தேதியில் இருந்து 3 கிழமை வரைக்கும் தங்கள் கேள்விகளை அனுமதிக்கப்படும் வரை காத்திருக்க வேண்டும்.

9. கொழும்பு அரசாங்க அதிபர் எந்தக் கேள்விப் பத்திரத்தையும் மறுக்கவோ அல்லது எதிலும் ஓர் பகுதியை ஏற்கவோ உரிமை யுடையவராவர்.

10. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் தன் வேலைகளைச் செய்விப் பதற்கு இலங்கைத் தொழிலாளரை மாத்திரம் உபயோகிக்க வேண்டும். இலங்கையாளர் என்பதை இலங்கைப் பிரஜையானவர் அல்லது பதிவு செய்யப்பட்ட பிரஜை என்வே கருதல் வேண்டும்.

11. கேள்விக்காரருக்கு விடப்படும் நோட்டீஸ் யாவும் அவருக்கு நேரிலேயே வழங்கப்பட்டோ அல்லது அவரால் கொடுக்கப்பட்ட வி ாசத் திற்கே தபால்மூலம் அனுப்பப்பட்டு இருந்தால் அவருக்கு அவ ற்றை வழங்கியதாகவே கருதல் வேண்டும்.

12. கேள்விப்பத்திரகாரர் தன் கீழ் உள்ள சிப்பந்தியாருக் கவென் ருனும் அவர் கோரும் நட்டம் எதையும் 1934 ம் ஆண்டின் 19 ம் இலக்கத் தொழிலாளர் நட்ட ஈட்டு ஆஞ்ஞைப்படி அத்தியாயம் 117 ம் நட்டம் கட்டவேண்டும்.

13. அரசாங்கத்திற்கு திருப்தியில்லாத எந்த வேலையாளையோ அல்லது வேறு யாட்களையோ வைத்து வேலை செய்விக்கத் தடுப்புக் கூறிவதற்கு அரசாங்கம் உரிமை உடையது.

14. அரசாங்கத்தினரால் தவருன கேள்வி ஒப்பந்தக்காரர் என்னும் இடாப்பில் சேர்க்கப்பட்டவரேனும் அல்லது போதிய காரணங்களால் ஒப்பந்தம் பண்ணப்படாதென அரசாங்க அதிபருக்குத் தோற்றுபவ ரோடும் ஒப்பந்தம் எழுதப்படமாட்டாது.

15. தேங்காய்களைத் தெரிந்து எடுக்காது காசைக் கட்டி அப்புறப் படுத்தல் வேண்டும்.

16. மற்றும் மேற்படி தகவல்களைக் கொழும்புக் கச்சேரி அரசாங்க அதிபர் அல்லது பிரிவுக் காரியாதிகாரி நீர்கொழும்பு என்போருக்கு மனுச்செய்து பெற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| கொழும்புக் கச்சேரி, | ஜி. பி. தம்பையா, |
| 1960 ம் ஆண்டு ஜூலை மீ 2 ந் வ. | அரசாங்க அதிபர், |
| | கொழும்பு மாவட்டம். |

---

**ஒப்பந்தக் கேள்விப் பத்திர அறிவித்தல் கொட்டியாகல குடியேற்றப் பிரதேசத்திற்குச் செல்லும் பாதையில் இரண்டு 10′×7′ பாலங்கள் அமைத்தல்**

மொனருகல மாவட்ட அதிபர், கொட்டியாகல குடியேற்றப் பிரதேசத்திற்கு செல்லும் பாதையில் இரண்டு 10′×7′ பாலங்கள் அமைப்பதற்காக 25.7.60 முற்பகல் 12.00 மணிவரை ஒப்பந்தப் பத்திரங்கள் பதிவு செய்த ஒப்பந்தக் கேள்விக்காரர்களிடமிருந்து ஏற்றுக்கொள்வார்.

ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் மொனருகல அதிபரிடம் ரூ. 25/- இலங்கையிலுள்ள எந்தக் கச்சேரியில் அல்லது பொது திறைசேரியில் கட்டிய பற்றுச்சீட்டுச் சமர்ப்பிப்போருக்கு 23.7.60 பிற்பகல் 3.00 மணி வரை வழங்குவார்.

ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் சீல் வைத்த காகித உறையில் "கொட்டியாக ் பாதை—பாலங்கள் அமைப்பதற்கு ஒப்பந்தக் கேள்விப் பத்திரம்" என எழுதி, அரசாங்க மாவட்ட அதிபர், கச்சேரி, மொனருகல என்னும் விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்களைப் பதிவுசெய்த காகிதமூலம் அனுப்பலாம். அல்லது காரி யாலய உதவியாளரிடம் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியிற் போடலாம்.

ஒப்பந்தக் கேளவிப் பத்திரங்கள் அனைத்தையும் அல்லது எதனையும் ஏற்கும் அல்லது ஏற்க மறுக்கும் உரித்து மொனருகல மாவட்ட அதிபருக்கு உரியதாகும்.

| | |
|---|---|
| மொனருகல கச்சேரி, | வி. பி. சில்வா, |
| 1960 ம் ஆண்டு ஜூலை மீ 2 ந் வ. | அரசாங்க மாவட்ட அதிபருக்காக, |

**ஒப்பந்தக் கேள்விப் பத்திர அறிவித்தல்—கொட்டியாகல குடியேற்றப் பிரதேசத்திற்குச் செல்லும் பாதையில் எட்டு 2′×2′ மதகுகளும் நான்கு 4′×4′ மதகுகளும் அமைத்தல்**

மொனருகல மாவட்ட அதிபர் கொட்டியாகல குடியேற்றப் பிரதேசத்திற்குச் செல்லும் பாதையில் எட்டு 2′×2′ மதகுகளும், நான்கு 4′×4′ மதகுகளும் அமைப்பதற்கு 25.7.60 முற்பகல் 12 மணிவரை ஒப்பந்தப் பத்திரங்கள் பதிவுசெய்த ஒப்பந்தக் கேள்விக்காரர்களிடமிருந்து ஏற்றுக் கொள்வார்.

ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் மொனருகல அதிபரிடம் ரூ. 25/= இலங்கையில் உள்ள எந்தக் கச்சேரியில் அல்லது பொது திறைசேரியில் பற்றுச்சீட்டுச் சமர்ப்பிப்போருக்கு 23.7.60 பிற்பகல் 3 மணிவரை வழங்குவார்.

ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் சீல் வைத்த காகித உறையில் " கொட்டியாகல பாதை—மதகுகள் அமைப்பதற்கு ஒப்பந்தக் கேள்விப் பத்திரம் " என எழுதி, அரசாங்க அதிபர், கச்சேரி மொனருகல என்னும் விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்களைப் பதிவு செய்த காகித மூலம் அனுப்பலாம், அல்லது காரியாலய உதவியாளரிடம் உள்ள கேள்விப் பத்திர பெட்டியிற் போடலாம்.

ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் அனைத்தையும் மறுக்கவும் அல்லது எதனையும் ஏற்கவும் உள்ள உரித்து மொனருகல மாவட்ட அதிபருக்கு உரியதாகும்.

மொனருகலக் கச்சேரி, வி. பி. சில்வா,
1960 ம் ஆண்டு ஜூலை மீ 2 ந் வ. மொனருகல மாவட்ட அதிபருக்காக.

---

**ஒப்பந்தக் கேள்விப் பத்திர அறிவித்தல்—கொட்டியாகல குடியேற்றப் பிரதேசத்திற்குச் செல்லும் பாதையில் ஒரு 18′×11′ பாலம் அமைத்தல்**

மொனருகல மாவட்ட அதிபர் கொட்டியாகல குடியேற்றப் பிரதேசத்திற்குச் செல்லும் பாதையில் ஒரு 18′×11′ பாலம் அமைப்பதற்காக 25.7.60 முற்பகல் 12 மணிவரை ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் பதிவுசெய்த ஒப்பந்தக் கேள்விக்காரர்களிடமிருந்து ஏற்றுக் கொள்வார்.

ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் மொனருகல அதிபரிடம் ரூ. 25/= இலங்கையில் எந்தக் கச்சேரியில் அல்லது பொது திறைசேரியில் கட்டிய பற்றுச்சீட்டு சமர்ப்பிப்போருக்கு 23.7.60 பிற்பகல் 3 மணிவரை வழங்குவார்.

ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் சீல் வைத்த காகித உறையில் " கொட்டியாகல பாதை—பாலம் அமைப்பதற்கு ஒப்பந்தக் கேள்விப் பத்திரம் " என எழுதி அரசாங்க அதிபர், கச்சேரி, மொனருகல என்னும் விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்களைப் பதிவுசெய்த காகிதம்மூலம் அனுப்பலாம் அல்லது காரியாலய உதவியாளரிடம் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியிற் போடலாம்.

ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் அனைத்தையும் அல்லது எதனையும் ஏற்கும் அல்லது ஏற்க மறுக்கும் உரித்து மொனருகல அரசாங்க அதிபருக்கு உரியதாகும்.

மொனருகலக் கச்சேரி, வி. பி. சில்வா,
1960 ம் ஆண்டு ஜூலை மீ 2 ந் வ. அரசாங்க மாவட்ட அதிபருக்காக.

---

**ஒப்பந்தக் கேள்விப் பத்திர அறிவித்தல்—கொட்டியாகல குடியேற்றப் பிரதேசத்திற்குச் செல்லும் பாதையில் ஒரு 10′×7′ பாலம் அமைத்தல்**

மொனருகல மாவட்ட அதிபர் கொட்டியாகல குடியேற்றப் பிரதேசத்திற்குச் செல்லும் பாதையில் ஒரு 10′×7′ பாலம் அமைப்பதற்காக 25.7.60 முற்பகல் 12 மணிவரை ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் பதிவுசெய்த ஒப்பந்தக் கேள்விக்காரர்களிடமிருந்து ஏற்றுக் கொள்வார்.

ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் மொனருகல அதிபரிடம் ரூ. 25/= இலங்கையில் உள்ள எந்தக் கச்சேரியில் அல்லது பொது திறைசேரியில் கட்டிய பற்றுச்சீட்டுச் சமர்ப்பிப்போருக்கு 23.7.60 பிற்பகல் 3 மணிவரை வழங்குவார்.

ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் சீல் வைத்த காகித உறையில் " கொட்டியாகல பாதை—பாலம் அமைப்பதற்கு ஒப்பந்தக் கேள்விப் பத்திரம் " என எழுதி, அரசாங்க மாவட்ட அதிபர், கச்சேரி, மொனருகல என்னும் விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும். ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்களைப் பதிவுசெய்த காகிதம்மூலம் அனுப்பலாம், அல்லது காரியாலய உதவியாளரிடம் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியிற் போடலாம்.

ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் அனைத்தையும் அல்லது எதனையும் ஏற்கும் அல்லது ஏற்க மறுக்கும் உரித்து மொனருகல மாவட்ட அதிபருக்கு உரியதாகும்.

மொனருகலக் கச்சேரி, வி. பி. சில்வா,
1960 ம் ஆண்டு ஜூலை மீ 2 ந் வ. மொனருகல மாவட்ட அதிபருக்காக.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.